**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII code of Criminal Procedure)**

**<u>In the Court of XI Additional Special Judge for CBI Cases</u>**

**<u>(CBI Cases Relating to Banks and Financial Institutions)</u>**

**<u>Chennai - 600 001.</u>**

| | | |
|---|---|---|
| Calendar Case | : | C.C. No. 9/2006 |
| Deposition of witness for | : | PW 13 |
| Name | : | Mr. A.Basker |
| Father's / Husband's Name | : | |
| Address for Communication | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion & Caste | : | |
| Age | : | years Mobile: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on this the 20th day of March, 2019.

---

**<u>முதல் விசாரணை</u>**

தற்போது நான் செங்கல்பட்டு நகராட்சியிலிருந்து 31.3.2014ல் நகராட்சி ஆணையராக ஓய்வு பெற்றேன். நான் மறைமலைநகர் நகராட்சியில் தலைமை எழுத்தராக 1.7.1999 முதல் 21.2.2005 வரை பணியாற்றி வந்தேன். அந்த நேரத்தில் மறைமலைநகர் சிறப்பு நிலை செயல் அலுவலராக திரு.T.S.கிருஷ்ணசாமி அவர்கள் பணிபுரிந்தார். மனைபிரிவு அங்கீகாரம் கோரும் மனுக்கள் மீது நகர ஊரமைப்பு இயக்குனர் அவர்களுக்கு செயல் அலுவலர் ஆய்வுக்குப் பிறகு பரிந்துரை செய்யப்படும். நகர ஊரமைப்பு இயக்குனர் அவர்கள் மனைபிரிவு ஒப்புதல் அளித்தபிறகு நகராட்சியில் மனைபிரிவு கட்டணத்தில் குடியிருக்கும் மனை, வணிக மனை, மற்றும் ஆய்வுக் கட்டணம், தெருவிளக்கு அபிவிருத்தி கட்டணம் மன்றத்தில் அங்கீகாரம்

செய்யப்பட்ட பிற்பாடு கட்டணங்கள் வசூல் செய்யப்பட்டு மனைபிரிவு அங்கீகாரம் செயல் அலுவலர் அவர்களால் அளிக்கப்படும். மனைபிரிவில் சாலைகள் மற்றும் வடிகால் முதலிய பணிகளை மனைபிரிவு உரிமையாளரே செய்ய வேண்டும்.

தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தீர்மான நகல் 25.7.2001ல் மறைமலை நகர் பேரூராட்சியில் நடைபெற்ற சாதாரண மன்ற கூட்டத்தில் மெஸர்ஸ் கோத்தாரி கன்ஸ்ட்ரக்சன் லிமிடெட்டுக்காக மறைமலைநகர் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பனங்கோட்டூர் கிராமத்தில் மனைபிரிவிற்காக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் 494 அலுவலக நகல் **அ.சா.ஆ.36** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. (டி15)

மேற்சொன்ன அ.சா.ஆ.36ன் படி மெசர்ஸ் கோத்தாரி கன்ஸ்ட்ரக்சன் மனைபிரிவு கட்டணம் ரூ.5,09,700/- காசோலை முகாந்திரம் செலுத்தப்பட்டதற்கு காசோலைகள் பெறும் பதிவேடு மறைமலை நகர் பேரூராட்சியில் பராமரிக்கப்பட்டு வருவதின் நகல் வரிசை எண்.188 அது **அ.சா.ஆ.37** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. (டி15)

தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் மறைமலை நகர் பேரூராட்சியில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு அனுமதி வழங்க திருத்தியமைக்கப்பட்ட வரைபட அனுமதி கட்டணம் மற்றும் திருத்தியமைக்கப்பட்ட மனைபிரிவு கட்டணம் 1.4.2001 முதல் வசூல் செய்ய மறைமலை நகர் நகராட்சியில் 29.12.2000 தேதியில் நடைபெற்ற சாதாரண மன்ற கூட்டத்தில் தீர்மானம் எண்.332ல் நிறைவேற்றப்பட்டது. அதன் அலுவலக நகல் **அ.சா.ஆ.38 (3 தாள்கள்)** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. (டி15)

அ.சா.ஆ.36 முதல் அ.சா.ஆ.38 வரையிலான ஆவணங்களை எங்கள் அலுவலகத்திலிருந்து சிபிஐ ஆய்வாளர் வேண்டுகோளின் அடிப்படையில் வழங்கப்பட்ட

முகப்புக் கடிதம் **அ.சா.ஆ.39 (2 தாள்கள்)** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. (டி.15).

சிபிஐ இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** 1, 2, 3, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 16 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

**5, 6 வது எதிரிகள் தரப்பில்** Defer petition filed and heard both sides. Petition dismissed. No cross.

**Re-examination** - NIL